# தமிழ் மாணவர்களுக்கான கட்டுரை மற்றும் ஓவியப் போட்டிகள்

ஐக்கிய நாடுகள், கல்வி விஞ்ஞான பண்பாட்டுக் கழகத்தினால் ( UNESCO) வருடம்தோறும் நடாத்தப்பட்டு வரும் உலகத் தாய்மொழிகள் தினத்தினையொட்டி, அமெரிக்க இலங்கைத் தமிழ்ச் சங்கம் உலகளாவியரீதியில் தமிழ்க் கட்டுரைப் போட்டி, ஓவியப் போட்டிகளை நடாத்தவுள்ளது.

இலங்கையிலும் மற்றும் தமிழ் மக்கள் புலம்பெயர்ந்து வாழும் ஏனைய நாடுகளிலும் நடாத்தப்படவுள்ள இப்போட்டிகளில் தமிழ்க் கட்டுரை **என் பட்டறிவு** என்னும் தொனிப்பொருளைக் கொண்டதாகவும் ஓவியப் போட்டி, **உறவுச் சித்திரங்கள்** எம் தமிழ் உறவுகளின் உணர்வுகளைச் சித்தரிக்கும் தன்மையைக் கொண்டதாகவும் அமையும்.

தமிழ் மாணவர்களின் ஆக்கத் திறனை ஊக்குவிக்கும் முகமாக ஒருங்கமைக்கப்படும் இப் போட்டிகள் இரண்டு பிரிவுகளாக நடாத்தப்படும்.

1. கீழ்ப்பிரிவு (வயது 12–15) 2.மேற் பிரிவு((வயது 16–18)

(வயதெல்லை 20.06.2017 கணக்கில் கொள்ளப்படும்.)

### கீழ்ப்பிரிவினருக்குரிய தமிழ்க் கட்டுரைக்கான தலைப்புகள்

1. நான் வாழும் சூழலும் எனது கல்வியும்
2. இடம் பெயர்ந்து வாழ்தல் அல்லது புலம்பெயர்ந்து வாழ்தல்
3. எனது குடும்பம்
4. எனது எதிர்காலக் கனவுகள்

(கட்டுரை 150 சொற்களுக்கு குறையாமலும் 250 சொற்களுக்கு மேற்படாமலும் எழுதப்பட வேண்டும்)

### மேற்பிரிவினருக்குரிய தமிழ்க் கட்டுரைக்கான தலைப்புகள்

1. போரும் வாழ்வும்
2. கல்வி அன்றும் இன்றும் அல்லது நானும் என் நாடும்
3. இராணுவச் சூழலில் மாணவர் வாழ்க்கை
4. என் எதிர்காலம் எதை நோக்கி…

(கட்டுரை 400 சொற்களுக்கு குறையாமலும் 600 சொற்களுக்கு மேற்படாமலும் எழுதப்பட வேண்டும்)

# ஓவியப் போட்டி

### கீழ்ப்பிரிவு / மேற்பிரிவு

ஓவியத்துக்கு A4 அல்லது A3 தாளினைப் பயன்படுத்த முடியும். பொதுவாகப் புழக்கத்தில் உள்ளதும் இலகுவாகப் பெற்றுக்கொள்ளக் கூடியதுமான வர்ண வகைகளைப்(Color pencils, Water color, Oil paint, Acrylic paint) பாவிக்கலாம்.

ஓவியர்களின் படைப்புக்கள், எம் தமிழ் உறவுகளின் உணர்வுகளைச் சித்தரிக்கும் தன்மையை கொண்டதாகவும், சுயமானவையாகவும் ஏற்கனவே பிரசுரிக்கப்படாதனவாகவும் இருக்க வேண்டும்.

## போட்டிக்கான முடிவு திகதி : 20.06.2017

ஓவியம், கட்டுரை ஆகியவை 20.06.2017 க்கு முன்னர் கீழே தரப்பட்டுள்ள ஏதாவது ஒரு முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

### அனுப்பும் முறை

மின்னஞ்சல் மூலமாக PDF முறையிலோ, தபால் ஊடாகவோ, நேரடியாகவோ கீழே தரப்பட்டுள்ள முகவரி ஒன்றுக்கு சேர்ப்பிக்கலாம்.

## மாணவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய விதிகள்:

1. மாணவர்கள் தமது முழுப் பெயர், பிறந்த திகதி, கல்வி கற்கும் பாடசாலை, தரம், தொடர்பு முகவரி, ஆகியவற்றை தெளிவாகத் தாளின் முன்பக்கத்தில் குறிப்பிட வேண்டும்.
2. மாணவர்கள் தமது ஆக்கங்களை தாம் கல்வி பயிலும் பாடசாலை அதிபரின் அத்தாட்சிக் கையொப்பத்துடனோ, அல்லது வகுப்பாசிரியரின் அத்தாட்சிக் கையொப்பத்துடனோ அனுப்பி வைக்க வேண்டும்.
3. ஒருவர் தாம் பங்குபற்றும் ஒரு போட்டிக்கு, ஒரு ஆக்கத்தை மட்டுமே சமர்ப்பிக்கலாம்.
4. கட்டுரை எழுதுபவர்கள் A4 தாளில் ஒரு பக்கத்தில் மட்டுமே எழுத வேண்டும்.

## போட்டி முடிவுகள் :

1. ஓவியம், கட்டுரைகள் ஆகியவை, இரண்டு துறைகளிலும் புலமைகொண்ட இருவேறு நடுவர் குழுவினரால் மதிப்பீடு செய்யப்பட்டுப் புள்ளிகள் வழங்கப்படும்.
2. நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.
3. போட்டி முடிவுகள் 20.08.2017ல் பொது அறிவித்தல் மூலமும், வெற்றிபெற்றவர்களுக்கு தனித்தனியாகவும் அறிவிக்கப்படும்.
4. போட்டிக்கு பெறப்பட்ட ஆக்கங்களை பிரசுரம் செய்தல், காட்சிப்படுத்தல் மற்றும் வெளியீட்டு உரிமை என்பன போட்டி ஒருங்கமைப்பாளர்களுக்கு உண்டு

## பரிசுகள் வழங்கப்படும் முறை

தெரிவு செய்யப்பட்ட சிறந்த கட்டுரைகள் மற்றும் ஓவியங்களுக்கான பரிசுகள் பின்வருமாறு வழங்கப்படும்.

### இலங்கை:

**கட்டுரைப் போட்டி :** **1வது பரிசு, 2 வது பரிசு, 3வது பரிசு,**
**10 ஆறுதல் பரிசுகள்**

**ஓவியப் போட்டி :** **1வது பரிசு, 2 வது பரிசு, 3வது பரிசு,**
**10 ஆறுதல் பரிசுகள்**

### புலம்பெயர்ந்து வாழும் நாடுகள் :

**கட்டுரைப் போட்டி :** **1வது, 2வது, 3வது பரிசுகள்.(உலகளாவிய ரீதியில்)**
**நாடுகள் ரீதியாக 05 ஆறுதல் பரிசுகள்**

**ஓவியப் போட்டி:** **1வது, 2 வது, 3வது பரிசுகள் (உலகளாவிய ரீதியில்)**
**நாடுகள் ரீதியாக 05 ஆறுதல் பரிசுகள்**

### பரிசுத் தொகை :

| | **கட்டுரை** | **ஓவியம்** |
|---|---|---|
| முதலாம் பரிசு | $ 500.00 | $ 500.00 |
| இரண்டாம் பரிசு | $ 400.00 | $ 400.00 |
| மூன்றாம் பரிசு | $ 300.00 | $ 300.00 |
| ஆறுதல் பரிசுகள் தலா | $ 100.00 | $ 100.00 |

### ஆக்கங்கள் அனுப்புவதற்கான முகவரிகள் :

**மின்னஞ்சல்:** tamilarts.language@gmail.com

**தபால் முகவரி** :

அவுஸ்திரேலியா: Thamil Aalayam, 57 Boorea Street Lidcombe NSW 2141 Australia
அமெரிக்கா Ilankai Thamil Sangam, 1315 Lees land Dr.Westerville, OH 43081, USA
இலங்கை: P.Murali,, School Road, Palchenai, Batticalo, Sri Lanka
பிரான்ஸ்: Association Franco-Tamoul, 6 rue jean Claude Cohen tannoudji, 77176 savigny le temple, France
யேர்மனி : Global Tamils Cultural Centre e.V, Mallinckrodtstr -141, 44147 Dortmund, Germany
பிரித்தானியா : Tamil Sakthi, 46.Thorpe Road , Eastham, London UK
சுவிற்சர்லாந்து: STEM Association, 5 Av du Lignon, 1219 Le Lignon, Geneva
கனடா : Canada Thamil Sangam, 2163 Lawrence Ave., Scarborough, ON M1P 2P5, Canada

மேலதிக விபரங்களுகக்கு: www. sangam.org

போட்டி ஒருங்கமைப்பாளர்கள்